

முதலமைச்சரும், கழக தலைவருமான, மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி ஈரோடு வடக்கு மாவட்டம் தாளவாடி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கழகத் துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா வீடு வீடாகச் சென்று ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் கழகத்திற்கு உறுப்பினர்களை சேர்த்தார். நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் ஒன்றிய கழகச் செயலாளர், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு திட்டத்தில் கரூர் மாவட்டம் கரூர் தொகுதி கோடங்கிப்பட்டியில் உறுப்பினர் சேர்க்கையை மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். மாநகராட்சி துணை மேயர் தாரணி சரவணன், பூத் கமிட்டி நிர்வாகிகள் அருகில் உள்ளனர்.

## புதுக்கோட்டையில் கடலில் தவறி விழுந்து உயிரிழந்த

# மீனவரின் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 5-

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினம் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்று கடலில் தவறி விழுந்து உயிரிழந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினம் துறைமுகத்திலிருந்து கடந்த 30.6.2025 அன்று நான்கு நபர்களுடன் INDTN08MM183 என்ற பதிவெண் கொண்ட விசைப்படகில் கடலுக்குள் 12 நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன் பிடிக்கச் சென்ற மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினம், கொடிகுளம் கிராமம், ராமநகரைச் சேர்ந்த மந்திரமூர்த்தி (வயது 30) த/பெ.பாண்டி என்பவர் எதிர்பாராதவிதமாக கடலில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

கடலில் தவறி விழுந்து உயிரிழந்த மீனவர் மந்திரமூர்த்தி அவர்களின் குடும்பத்தி னருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூரில் “ஓரணியில் தமிழ்நாடு” என்ற முழக்கத்துடன் பொதுமக்களிடம் கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து புதிய உறுப்பினர் சேர்க்கை பணியில் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவ லிங்கம் வீடு வீடாகச் சென்று ஈடுபட்டார். அப்போது ஆர்.வி.ஸ்ரீராம், தே.மலையரசன், கே. பாலசுப்பிர மணியம், ஏ.ஜி. ராமச்சந்திரன், ஏ.ஏ.ஆறுமுகம், கணேஷ்குமார், கவிதா ஸ்ரீராம் , செல்வமணி, அருண்குமார், சம்பத்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்

## மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில்

# பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் “ஓரணியில் தமிழ்நாடு” பொதுக்கூட்டம்!

## எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ.-போடி.காமராஜ் சிறப்புரை!

பெரம்பலூர், ஜூலை 5-

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில் “ஓரணியில் தமிழ்நாடு” பொதுக்கூட்டம், புதிய பேருந்து நிலையம் கலைஞர் திடலில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத் வரவேற்புரை யாற்றினார்.

சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமை கழக பேச்சாளர் போடி.காமராஜ், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல் ஹிதா இஸ்மாயில், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், பட்டுச்செலவி ராஜேந்திரன், செ.அண்ணாதுரை, ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், டாக்டர் செ.வல்லபன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் நா.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன்,

டி.ஆர்.சிவசங்கர், ஆர்.அருண், மா.பிரபாகரன், பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், எம்.வெங்கடேசன், எஸ்.ஜாகிர் சேன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா,

மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கவியரசு, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி (எ) அப்துல் பாரூக், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வி.சி.ரவி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அருண்குமார், மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் ஏ.சுந்தர்ராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராசிபுரம் கே. இராமசாமி

### ஜூலை 5 (2000)



**சேலம் மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், திராவிட இயக்கத்தின ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தவர்.**

**இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் என இரு ஒன்றியங்களில் செயலாளராக இருந்தவர். பேரூர்க் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**இராசிபுரம் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி இயக்குனநராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு “மாநில சிறந்த கூட்டுறவாளர்” விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# கொள்கைமகன் வாழ்க!



அன்னைதுர்கா ஈன்றெடுத்த
அன்புமகன் வாழ்க!
“ அன்பகத்தை” வழிநடத்தும்
அறிவுமகன் வாழ்க!
தன்னைவென்று தரணிவெல்ல
வந்தமகன் வாழ்க!
தலைவர்எங்கள் “தளபதி”யின்
கொள்கைமகன் வாழ்க!

செல்லமே, தந்தை உள்ளமே,
அன்பு வெள்ளமே நீ வாழ்க!
சிங்கமே, கலை அங்கமே,
ஒளிர் தங்கமே! நீ வாழ்க!

ஆரியத்தை வேரறுக்கும்
சேரன்இவன் வாழ்க!
அழகுதமிழ்ப் பாண்டியனாம்
மாறன்இவன் வாழ்க!
தீரம்கொண்டு களத்தில்நிற்கும்
வீரன்இவன் வாழ்க!
“ திருக்குவளைச் சோழனுக்குப்”
பேரன்இவன் வாழ்க!

தென்னனே, இளம் மன்னனே,
எழில் வண்ணனே! நீ வாழ்க!
செங்கதிர் நிகர் செல்வனே,
மனக் கள்வனே! நீ வாழ்க!

இரக்கத்தின் அருள்குணத்தின்
எல்லைஇவன் வாழ்க!
இனப்பகைவர் கனவுகளில்
தொல்லைஇவன் வாழ்க!
சிரிக்கின்ற பூஞ்சிரிப்பில்
முல்லைஇவன் வாழ்க!
“சேப்பாக்கம் தொகுதி”செல்லப்
பிள்ளைஇவன் வாழ்க!

கன்னலே, குளிர் திங்களே,
நறுந் தென்றலே! நீ வாழ்க!
கைசிவந் திடும் வள்ளலே,
உயர் செம்மலே! நீ வாழ்க!

முன்னேற்றக் கழகத்தின்
இளையநதி வாழ்க!
பொன்னேட்டு வரலாற்றின்
புதியவிதி வாழ்க!
தென்னாட்டுப் போர்ப்படையின்
இதயநிதி வாழ்க!
திராவிடத்தின் விடியல்!எங்கள்
உதயநிதி வாழ்க!

அந்தமே இலாச் சொந்தமே,
உயிர்ப் பந்தமே! நீ வாழ்க!
“அண்ணனும் பெரி யாருமே”
இரு கண்எனும் நீ வாழ்க!

அன்னைதுர்கா ஈன்றெடுத்த
அன்புமகன் வாழ்க!
“ அன்பகத்தை” வழிநடத்தும்
அறிவுமகன் வாழ்க!
தன்னைவென்று தரணிவெல்ல
வந்தமகன் வாழ்க!
தலைவர்எங்கள் “தளபதி”யின்
கொள்கைமகன் வாழ்க!

**(சூலை 4 கழக இளைஞரணிச் செயலாளராக, துணை முதல்வர், மதிப்பிற்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட நாள்)**



... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**



சேலம் மாநகராட்சி அணைமேடு முதல் செவ்வாப்பேட்டை வரை 2.5 கி.மீ தூரத்திற்கு ரூ.25 இலட்சம் மதிப்பில் திருமணிமுத்தாற்றை தூர்வாரும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேற்று முன்தினம்(03.07.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, , சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



திருச்சி மாவட்டம் துறையூரில் நடைபெற்ற ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பொதுக்கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் பேசினார். உடன் எம்.எல்.ஏ. ஸ்டாலின் குமார், தர்மன் ராஜேந்திரன், மெடிக்கல் முரளி, ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை வீரபத்திரன் முத்துச்செல்வம், சிவ சரவணன்,அசோகன் நகர மன்ற தலைவர் செல்வராணி, சரண்யா உட்பட பலர் கலந்து கொண்டனர்



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி மோளையானூர் கிராமத்தில் வீடு வீடாகச் சென்று “ஓர் அணியில் தமிழ்நாடு” புதிய உறுப்பினர் சேர்க்கையை தர்மபுரி மேற்கு மாவட்டகழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தொடங்கி வைத்து, உறுப்பினர் அட்டைகளை வழங்கினார்.உடன் (BLA2)(BLC) (BDA) உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.